# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2366/20 - 2024 ජනවාරි මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.01.11

*2366/20 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 277/40*

**புராதனப்பொருட்கள் கட்டளைச் சட்டம் (188 ஆம் அத்தியாயம்)**

**33 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

(188 ஆம் அத்தியாயமான) புராதனப்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, தொல்பொருள் பணிப்பாளர் தலைமை அதிபதி கே.ஏ.டி.ஆர். நிஷாந்தி ஆகிய நான், காணி ஆணையாளர் தலைமை அதிபதியின் அங்கீகாரத்துடன் இவ்வறிவித்தல் மூலம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்க காணியின் இடப்பரப்பு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக “தொல்பொருள் ஒதுக்கம்” என இருத்தல் வேண்டுமென இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

**கே.ஏ.டி.ஆர். நிஷாந்தி,**
தொல்பொருள் பணிப்பாளர் தலைமை அதிபதி.

கொழும்பு.
2023, திசெம்பர் 27.

**அட்டவணை**

தொல்பொருள் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட தெமட்டமல்கம ஊத்துவெல்லிய தொல்லியல் பூமி.

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டத்தில் மஹவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவில் வடக்கு விலச்சிய கோரளையின் இல. 367 தெமட்டமல்கம கிராம அலுவலர் பிரிவின் போகொட தெமட்டமல்கம எனும் கிராமத்தில் அமைந்துள்ள தெமட்டமல்கம, ஊத்துவெல்லிய எனவழைக்கப்படும் காணியின் நில அளவையாளர் தலைமை அதிபதியினால் 2020.07.30 ஆந் திகதியிடப்பட்டு அளவை செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபட இல. AA/DSO/2020/364 இல் துண்டு A இல் விளக்கப்பட்டதான பதினாறு தசம் ஆறு ஏழு ஒன்பது ஐந்து (ஹெக்டயார் 16.6795) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான காணித்துண்டானது எல்லையாக வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு எல்லைகளுக்கு நிலஅளவை வரைபட இலக்கம் PP 02 இல் உள்ளவாறு அடையாளமிடப்பட்ட தெமட்டமல்கம ஒதுக்கத்தின் துண்டு இல. 3232 இனால் சூழப்பட்டுள்ளது.

EOG 01 - 0087